## உலகளாவியப் பிரார்த்தனைக் கொண்டாட்டம் -2025

**துதி செய்ய** -- கடவுள் வெற்றியாளர்: எதிரியை மேற்கொள்ளும் அல்லது தோற்கடிக்கும் ஒருவர்; வெற்றி கொள்பவர்; பாதுகாப்பவர்; விடுதலை செய்பவர்; சாதனையாளர்; முறியடிப்பவர்.

**1 நாளாகமம்** 29:11. **கர்த்தாவே**, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; **கர்த்தாவே**, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

**சங்கீதம்** 98:1. **கர்த்தருக்கு**ப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது.

**நீதிமொழிகள்** 21:31. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்;
ஜெயமோ **கர்த்தரால்** வரும்.

**1 கொரிந்தியர்** 15:57-58. நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, **கர்த்தருக்குள்** நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், **கர்த்தருடைய** கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

**பாவ அறிக்கையிடுதல்** – 1 யோவான் 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**நன்றி செலுத்துதல்** – சங்கீதம் 20: 5 நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்; உமது வேண்டுதல்களையெல்லாம் **கர்த்தர்** நிறைவேற்றுவாராக.

**இறை வேண்டல்—**

**பிள்ளைகளுக்காக**: __________ - வின் பேச்சும், பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக. I கொரிந்தியர் 2: 5 – லிருந்து

**கிறிஸ்துவை அறியாதவருக்காக**: அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்று _______ அறிவார்களாக ; _______ இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4: 12 – லிருந்து

**ஆசிரியர்களுக்காக**: கெட்ட வார்த்தை ஒன்றும் ______ வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுவாறாக.
எபேசியர் 4:29 – லிருந்து

**பள்ளிகளுக்காக**: பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய _______ பள்ளி செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதிப்பீராக. 1 இராஜாக்கள் 8:36a – லிருந்து

**அம்மாக்களின் ஜெபம் (MIP)** : தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி MIP - இன் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவாராக.
பிலிப்பியர் 4:19 – லிருந்து

**ஆசீர்வாதம்**: **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 2 கொரிந்தியர் 13: 14

Moms in Prayer INTERNATIONAL
சர்வதேச அன்னையர் பிரார்த்தனை குழு